# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 4421/SCIC/2026**

Thiru.C.B.Menon - மேல்முறையீட்டாளர்
No.163-Defence Officer's Colony
Ekkattuthangal
CHENNAI-600 032.
Phone:9884720249

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
செயற்பொறியாளர்
மண்டலம்-12
பெருநகர சென்னை மாநகராட்சி
ஆலந்தூர், சென்னை-600 016.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **23.02.2026** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 01.04.2026 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.04.2026 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 09.05.2026 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 23.05.2026 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 23/02/2026 நாளிட்ட மனுவை The Public Information Officer/ Executive Engineer - Zone 12 - Ward-158-GCC, SIDCO Industrial Estate, Chennai-32 அவர்களுக்கு அனுப்பி, அதில் "I would like to peruse / inspect the documents / records relating to the approval given / accorded for constructions of building given on the plots on the TN Area Defence Officers Co-operative Housing Society Ltd., No.JJ-337 Defence Officers Colony,

Chennai-32 from your office files as given below. To take the required copy of records / documents both from my manual and electronic sources.” என்பன போன்று 18 (பதினெட்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.C.B.மேனன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.இளையராஜா, உதவி செயற்பொறியாளர், மண்டலம்-12, ஆலந்தூர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை அவர்கள் ஆஜராகி, தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி மூன்றாம் நபருக்கு தகவல் அளிக்கும் நடைமுறையினை தொடங்கிடும் வகையில், 10/03/2026 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்களை அளிக்கலாமா ? என மூன்றாம் நபருக்கு கடிதம் அனுப்பியதோடு, அதன் நகலினை மனுதாரருக்கும் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அது தொடர்பான நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவிக்கையில், இப்பொருண்மை தொடர்பாக 23/03/2026 தேதியிட்டு மனுதாரருக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், மேற்சொன்ன பகுதியில்தான், தானும் வசித்து வருவதாகவும், அங்கு கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெறுவதாகவும், அதனாலேயே தான் மேற்குறிப்பிட்ட தகவல்களை கோரியுள்ளதாகவும் தெரிவித்தார். **எனவே, மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு 07/09/2026 அன்று (இந்த தேதி மனுதாரரே தெரிவித்தது - மனுதாரர் செப்டம்பரில் நாள் குறிப்பிடக் கோரினார்) காலை 11.00 மணிக்கு செல்ல வேண்டுமென்றும், அதற்கேற்ற வகையில் பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர், தனது பிரிவு 6(1)-ல் கோரிய தகவல்களுக்கு தொடர்பான பதிவேடுகளை / ஆவணங்களை தயார் நிலையில் வைத்திருந்து, மனுதாரரை பார்வையிடச் செய்து, அன்னார் கோரும் உரிய தகவல்களின் நகல்களை அன்றே (07/09/2026) அளிப்பதோடு, அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கையினை அன்றிலிருந்து ஒரு வார காலத்திற்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4421/SCIC/2026</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
செயற்பொறியாளர்
மண்டலம்-12
பெருநகர சென்னை மாநகராட்சி
ஆலந்தூர், சென்னை-600 016.

<u>மேல்முறையீட்டாளர்</u>

Thiru.C.B.Menon
No.163-Defence Officer’s Colony
Ekkattuthangal, CHENNAI-600 032.
Phone:9884720249
RG/Sr.PC